# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2016

ஆண்டு: 3 திகதி: 18-06-16

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி நிர்மலா தயாளன்

மாணவர் பெயர்: -----------------------------------------------------

1. **பின்வரும் பந்தியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக**. (20 புள்ளிகள்)

சிங்கத்தின் தோல் ஒன்று ஒரு கழுதைக்குக் கிடைத்தது. சிங்கத்தோலைப் போர்த்திக் கொண்டு கழுதை காட்டிற்குள் உலாவியது. அதைப் பார்த்த மிருகங்கள் கழுதையை சிங்கம் என்று நினைத்து பயந்து ஓடின. கழுதை இதைக்கண்டு சந்தோஷம் அடைந்தது. பின்பு கிராமத்திற்குள் சென்றது. மனிதர்கள் சிங்கம் வந்ததாகப் பயந்து ஓடினர். இப்படி மிருகங்களும் மனிதர்களும் பயந்து ஓடுவதைக் கண்டு கழுதைக்கு மகிழ்ச்சி அதிகமாகவே திடீரென கத்த ஆரம்பித்தது. கழுதையின் குரலைக் கேட்ட மனிதர்கள் பயம் நீங்கி கழுதையின் பக்கம் வந்து பார்த்து சிங்கத்தோலை நீக்கிவிட்டுக் கழுதையை தடியால் பலமாக அடித்துக் கொன்றனர்.

நீதி:--வேஷத்தால் எல்லோரையும் ஏமாற்ற முடியாது.

1.1- இக்கதையில் வரும் மிருகங்கள் எவை?

________________________________________

1.2- கழுதைக்கு என்ன கிடைத்தது?

________________________________________

1.3 காட்டில் மிருகங்கள் ஏன் கழுதையைப் பார்த்து பயந்தன?

________________________________________

1.4 கழுதை எப்படி இறந்தது?

________________________________________

1.5 இக் கதையில் வரும் நீதி என்ன?

________________________________________

2. **இரு சொற்களைக் கண்டுபிடியுங்கள்** (10 புள்ளிகள்)

2.1 அணிவகுப்பு ----------------------- --------------------------------

2.2 ஆசிரியர் -------------------------- ----------------------------------

2.3 இரும்புப் பாதை ------------------------- ---------------------------------

2.4 உரையாடல் -------------------------- ----------------------------------

2.5 தாத்தாவும் --------------------------- ------------------------------------

3 **சரியான விடைகளின் கீழ் கோடு இடுக.** (10 புள்ளிகள்)

3.1 அங்கே பார் குதிரைகள் ( மேய்ந்தன மேய்கின்றன மேயும் )

3.2 நேற்று மழை ( பெய்யும் பெய்கிறது பெய்தது )

3.3 நாம் இப்போது பரீட்சை ( எழுதுகின்றோம் எழுதுவோம் எழுதினோம்)

3.4 போன வாரம் அப்பா கன்பரா ( போனார் போகின்றார் போவார்)

3.5 தாத்தா நாளை ( வருவார் வருகிறார் வந்தார்)

4 **எதிர்ச்சொல்லை இணைக்கவும்** (10 புள்ளிகள்)

| | |
|---|---|
| 4.1 மகிழ்ச்சி | தோல்வி |
| 4.2 இரவு | சோம்பல் |
| 4.3 இளமை | துக்கம் |
| 4.4 வெற்றி | பகல் |
| 4.5 உற்சாகம் | முதுமை |

5. **<u>பின் வருவனற்றில் எதாவது ஒன்றைப் பற்றி 5 வசனங்கள் எழுதுக</u>**

(25 புள்ளிகள்)

அ) குடும்பம்

ஆ) உடல் உறுப்புகள்

இ) கலை விழா

ஈ) வகுப்பறைப் பொருட்கள்

6. **<u>வசனமாக ஒழுங்குபடுத்துக</u>**

6.1) வாணி என்னை சொன்னாள் கேட்க

6.2) விடுவார் தேங்காயை ஒருவர் உருட்டி

6.3) வந்தது காகத்துக்கு யோசனை ஒரு

---

6.4) குடித்தது தண்ணீரைக் காகம்

--------------------------------------------------------------------------------

6.5) இருந்தது தண்ணீர் பானைக்குள் சிறிதளவு

--------------------------------------------------------------------------------

7) **<u>உங்கள் அப்பா வேண்டிய புதுக் காரைப் பற்றி உங்கள் தோழி அல்லது தோழனுக்கு கடிதம் ஒன்று எழுதுக</u>.** (15 புள்ளிகள்)